சமூக வரலாறு

எஸ். இராமச்சந்திரன்

தமிழக வேளாளர்களின் வரலாறு

சாமந்தரும் வேளாண் சாமந்தரும்

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிற உமாபதி சிவாச்சாரியாரால்[1] எழுதப்பட்ட சேக்கிழார் புராணம், சிற்றரசர் குலத்தவர் ஐவர் எனப் பட்டியலிடுகிறது எனக் கண்டோம். இவர்களுள் கூற்றுவநாயனார் களப்பிர குலத்தவர். உமாபதி சிவாச்சாரியார் சார்ந்திருந்த சித்தாந்த சைவத்தை உருவாக்கிய மெய்கண்டார், களப்பிர குலவேளாளராவார். அவ்வாறிருக்க, பல்லவர்கள், மலையமான்கள் ஆகியோருடன் களப்பிரர் குலத்தவரையும் சேர்த்துக் குறிப்பிட்டது ஏன் என்ற கேள்விக்கு விடை காண முயல்வோம். இக்கேள்விக்கான விடையில் தான் வேளாளர் குல வரலாற்றின் இறுதிச் சிக்கலுக்கும் விடை இருக்கிறது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பல்லவ அரச குலத்தின் முதன்மைக் கிளையினரான - பல் நாட்டார் எனப் பட்ட - பள்ளி குலத்தவரும், மலையமான் வம்சத்தின் முதன்மைக்குடிகளான மலையமக்களும் அவ் வம்சத்தின் அடித்தட்டைச் சேர்ந்த நத்தமக்களும் சித்திரமேழிப் பெரியநாட்டார் அணியில் சேர்ந்து வேளாளர்குல அடையாளத்தை ஏற்றனர். மட்டு மின்றி இவர்கள் அனைவரும் தம்மை இடங்கைத் தளத்தவர்களாக (இடங்கைப் போர்ப்படைப் பிரிவினராக) அறிவித்துக் கொண்டனர்.[2] இவர்களுள் நத்தமான்கள், யாதவ குலத்தவரென்றும் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர்.[3] இது, வெட்சிப்போர் மரபினரான[4] மலையமான் குலத்தவரின் கிளையரா யினும் தாங்கள் ஆனிரைகளைப் பராமரித்து விவ சாயத்திற்குப் பயன்படுத்தும் நாகரிகக் குடிகளாகி விட்டவர்கள் என்பதை உணர்த்துவதற்கும், திருக் கோவலூர் (கோபாலர் ஊர் அல்லது ஆயர் ஊர்) அரசவம்சக் கிளையினர் என்பதைப் பதிவுசெய்வ தற்கும் இவர்கள் விழைந்ததைக் காட்டுகிறது. ஆனால் இவர்கள் வேளிர் குலத்தவரைப்போல் யாதவ குலத் தவர் - யதுவம்சத்தவர் அல்லர். வேளிர் குலத்தவ ருடன் மலையமான் வம்சத்தவர் மணஉறவு கொண்டி ருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.[5] ஆயினும் பல்லவர்களுக்கும் மலையமான்களுக்குமிடையே நிலவிய உறவு என்பது வேளிர் குலத்தவர்களுடனான உறவை விட நெருக்கமானதாக இருந்தது; மட்டு மின்றிப் பல்லவ குலத்தவர்களுக்கும் மலையமான் குலத்தவர்க்கும் பல ஒப்புமைகளும் இருந்தன.

தாய்வழியில் காடவர்களான பல்லவர்கள், தொடக் கத்தில் பரத்வாஜ கோத்திரத்துப் பிரமாணர் களுடனான மணஉறவால்தான் யாகம் செய்யும் சத்திரிய அந்தஸ்தை அடைந்தனர். காடவர் குல அரச வம்சத்தவராகிவிட்ட பல்லவர்கள் தங்கள் ஆட்சியதி காரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக வேளாள வர்ணத்து அரச வம்சங்களுடனும் பெண்ணெடுத்து மணஉறவு கொண்டனர். எடுத்துக்காட்டாக ஐயடிகள் காடவர்கோன் எனக் கருதப்படும் சிம்மவிஷ்ணு பல்லவனின் தாய் கங்க வம்சத்து இளவரசி. மேலும் திரையர், ஒளிநாகர் போன்ற குலத்தவருடன் தடை யற்ற மணஉறவு கொண்டதன் மூலமே பல்லவர்கள் தமிழக வேந்தராயினர். சோழராட்சிக் காலத்தில் கி.பி.11-12ஆம் நூற்றாண்டுகளில் பள்ளி குலத்தவர் "இடங்கை மீகாமன்" எனப்பட்டம் புனைவதற்கு இதுவே பின்னணி எனலாம்.

மலையமான் குலத்தவர், பார்க்கவ கோத்திரத்தவர் என்று கல்வெட்டுகளிற் குறிப்பிடப்படுகின்றனர்.

இது தந்தைவழியில் அசுரகுருவான சுக்கிராச்சாரியார் வழியினர் எனப் பொருள்படும். பல்லவர்கள் போன்றே இவர்களும் பிரம்மசத்திரிய வர்ணத்தவராகவே தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர் என்பதை இது உணர்த்தும். இக்குலத்தைச் சேர்ந்த தெய்வீகன் என்ற மன்னன் வேள் பாரியின் மகளைத் திருமணம் செய்துகொண்டான் எனப் பழங்கதைகள் குறிப்பிடுகின்றன. கி.பி.952ஆம் ஆண்டுக்குரிய, திருக்கோவலூருக்கருகிலுள்ள சோழ பாண்டியபுரம் ஆண்டிமலையில் பொறிக்கப்பட்டுள்ள மலையமான் சித்தவடவனின் கல்வெட்டு பின்வருமாறு தெரிவிக்கிறது:

"வெள்ளிகுல முதல் மேதகு செம்பொன்
மாரி பெய்ய மலர் மழை பொழியப்
பாரி மகளைப் பைந்தொடி முன்கைப்
பிடித்தோர் வழிவரு குருசில்"[7]

பாரி இறந்த பின்னர் பாரியின் நண்பரான கபிலர், மலையமான் மன்னனொருவனுக்குப் பாரியின் மகளை மணம் புரிவித்ததாக இராஜராஜ சோழனின் திருக்கோவலூர்ப் பாடல் கல்வெட்டு தெரிவிக்கிறது. சங்க இலக்கியமான புறநானூற்றின் 113, 236ஆம் பாடல்களுக்குரிய அடிக்குறிப்பு, கபிலர் வடக்கிருந்து உயிர்துறக்கும் முன்னர் பாரியின் மகளிரைப் பார்ப்பார் வசம் அடைக்கலப்படுத்தியதாகக் கூறுகிறது. இப் பார்ப்பார் பார்க்கவ கோத்திரத்தவராக- சுக்கிராச்சாரியார் மரபினராக - இருக்கலாம். இவர்கள், தங்கள் கோத்திரவரும் பிரம்மசத்திரிய வர்ணத்தவருமான மலையமான் குல அரசருக்குப் பாரிமகளிரை மணம் புரிவித்திருக்கலாம்.

இராஜராஜ சோழனின் தாய் வானவன்மாதேவி, மலையமான் குலத்தவள். கி.பி. 10-11ஆம் நூற்றாண்டுகளில் மலையமான் குலத்தவர் பலர், சோழ அரசில் அதிகாரம் மிகுந்த பதவியான "திருவாய்க் கேள்வி" பதவியில் அமர்த்தப்பட்டிருக்க வேண்டும். "திருவாய்க்கேள்வி"யின் வடமொழியாக்கமான "சுருதிமான்" என்பது, மலையமான் குலத்தவருள் ஒரு பிரிவினர்க்குரிய பெயராகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. சுருதிமான் குலப்பிரிவைச் சேர்ந்த நக்கன் சந்திரன் என்ற வீரன், இராஜமல்ல முத்தரையன் என்ற பட்டப்பெயர் பெற்றிருந்தான் என கி.பி. 1015ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.9 கி.பி. 13ஆம் நுற்றாண்டின் முற்பகுதியில் மலையமான்கள், நத்தமான்கள் போன்றே இவர்களும் இடங்கைப் படைத்தளத்தைச் சேர்ந்த சாதியினராகத் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டதோடு இடங்கைச் சாதி என்பதே பிராமணர்களின் பணிமக்களான வீரர் சாதிதான் என்றும் அறிவித்துக் கொண்டனர்.[10]

மலையமான் சிற்றரசர் பிரிவினருள் கிளியூர் மலையமான்கள் எனப்பட்டவர்கள், மறக்குல அகம்படியருடன் மணஉறவு கொண்டு "மலையமான் வாணகுலராயன்" என்றும் "வாண கோவரைய மலையமான்" என்றும் பட்டம் புனைந்தனர்.[11] "மறவன் நரசிம்மவர்மன்' என்ற பெயருடைய மலையமான்களும் இருந்தனர். லாடர் குலச் சிற்றரச மரபின்ருடன் மணஉறவு கொண்டதன் விளைவாக "மிலாடர்" என்றும் "மிலாடுடையார்" என்றும் இவர்கள் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மெய்ப்பொருள் நாயனாரை "மிலாடுடையார்" என்றே கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. நரசிங்க முனையரையர் இத்தகைய மறக்குல அகம்படியர் உறவையேற்ற மலையமான் வம்சத்தவராகலாம். இத்தகைய மணஉறவுகள் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கவேண்டும். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசுக் கெதிராகச் சிற்றரசு குலத்தவர் அணி திரண்டதன் பின்னணி இதுவே எனத் தோன்றுகிறது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சேலம், ஆற்றூர், ஆறகழூர்ப் பகுதியான மகதை மண்டலத்தை ஆட்சி செய்த மாவலி வாணர்கள், மலையமான் சிற்றரசர்களைப் போரில் வென்றனர். இது குறித்த பழம் பாடல் ஒன்றுள்ளது:

தென்பகை அடக்கியபின் வாணகுல தீபன்
செய்த தனியாண்மை விடதிக்கிலறி கிற்பீர்
பொன்பொரு பொருப்பரண் விடாமலைய மானைப்
போரெயிலிலே பொருத ஓரு பெரும் போர்
வன்பகை தவிர்த்ததொரு குதிரை வலியாலே
வாய்ப்பகை தவிர்த்ததொரு கோலின் வலியாலே.

இப்போரின் விளைவாக மலையமான், மாவலி வாணாதிராயனுக்குத் தன் பெண்ணை மணம் செய்து கொடுத்தான்.[13] இருவர்க்குமிடையில் ஏற்பட்ட உடன் படிக்கைப்படி ஆள்வினையாற்றுக்கு வடக்கிலுள்ள பகுதியை வாணாதிராயனும் தெற்கிலுள்ள பகுதியை மலையமானும் பேரரசர் தலையீடின்றிச் சுயமாக ஆள்வதற்கு ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது.[14] மேலும் பல்லவர், கங்கர் ஆகியவர்களுடன் மலையமான்கள் மணஉறவு கொண்டதன் மூலம் சோழ கங்கப் பல்லவரையன் என்றும் பட்டம் புனைந்தனர். பல்லவ குலக் கோப்பெருஞ்சிங்கன், மலையமான் குலத்தவருடன் கொண்ட மணஉறவின் அடையாளமாக 'அசல(மலைய)குல உத்தமன்' எனப் பட்டம் சூடினான். சற்றொப்ப இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை பல்லவ அரச குலப் படைவீரர்களாக இருந்த பள்ளி குலத்தவரும், சுந்தர சோழன் இறந்த போது சத்திரிய மரபின்படி உடன்கட்டை ஏறிய வானவன் மாதேவியின் குலத்தவரான மலையமான் குலத்தவரும் இவ்வாறு ஒட்டி உறவு கொண்டாடிய தோடு, பிராமணர்களின் பணிமக்களான இடங்கைச் சாதிக்குழுவினராகத் தம்மை அறிவித்துக்கொண்டது தமிழ்ச் சமூக வரலாற்றில் முதன்மையான திருப்பு முனையாகும்.

இந்நிகழ்வுப்போக்கு உருவாவதற்கும் முற்றி

முதிர்வதற்கும் சோழ அரசு எந்த அளவு காரணமாக இருந்தது? ஏன் காரணமாக இருந்தது? இக்கேள்வி களுக்கு நிலவுடைமை உறவுகள் சார்ந்த பொருளியல் - அரசியல் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் விடை காண்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளன. ஆனால் கிடைத்த விடை முழுமையானதாக இல்லை. சமூகவியல் வரலாற்றுக் கண்ணோட்டத் தில் நோக்கினால் முழுமையான விடை கிடைக்க வாய்ப்புள்ளது. அம்முயற்சியை இங்கு மேற்கொள் வோம்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வலிமை பெற்று 11ஆம் நூற்றாண்டில் விரிவாக்கம் பெற்று, வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகின் பெரும்பகுதியைத் தன் கொற்றத்தின் கீழ்க் கொணர்ந்த சோழர் ஆட்சி, 11ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பை உடையதாக இருந்தது. இக்காலகட்ட வரலாற்றில் வட்டாரத் தலைவர்களின் பங்கு பற்றிச் சோழர் சாசனங்கள் மௌனம் சாதிக்கின்றன என்றும் அம்மௌனம் ஆய்வாளர்களை மருளச் செய்கிறது என்றும் அறிஞர் ஒய். சுப்பராயலு குறிப் பிடுகிறார்.[15] இது உண்மையே. ஆனால் அம் மௌனம், அதிகார மொழியைக் கற்றுக் கொள்ளாத ஆரம்பநிலை ஆட்சியாளர்களின் மௌனமன்று; மூலப்படையின் - முழுநேர தொழிலுவத்தின்- வலிமையால் விரிவாக்கம் பெற்ற அதிகாரத்தின் மௌனமாகும்.

கடந்த அத்தியாயத்தில் கோனாட்டு இருங்கோ வேள் மரபினர் கொங்குச் சோழர்களாக உருமாறி ஆட்சியமைத்தமை பற்றியும் கொங்கவாள் எழுநூற்று வர் என்ற அரச குலப்படை உருவானமை குறித்தும் கண்டோம். ஆதித்த சோழன் (கி.பி. 888-907) பல்லவப் படைகளை வீழ்த்தித் தொண்டைமண்டலத் தைக் கைப்பற்றிய செயல்பாட்டில் கொடும்பாளூர் வேளிர் படைகளின் பங்கு முதன்மையானது.[16] அவ்வாறு கைப்பற்றப்பட்ட பின்னர் அப்பகுதியில் பல்லவ அரச குலப்படையினரோ மாவலி வாணர் குலப் படையினரோ மீண்டும் எழுச்சி பெற்றுவிடா வண்ணம் சோழ அரசகுல, வேளிர்குலப் படைப் பிரிவு ஒன்று தொண்டைமண்டல எல்லைப்பகுதி யில் திருமுனைப்பாடி நாட்டில் நிறுத்தி வைக்கப் பட்டது. கி.பி. 936 அளவில் முதற் பராந்தக சோழ னின் மகன் இராஜாதித்த சோழனின் பெரும்படை (மகாசேனை) திருநாவலூர்ப் பகுதியில் இருந்தது. அப்பெரும்படையின் தலைவனாக இருந்தவன், ஆய்வேள் நாட்டின் நந்திக்கரைப் புத்தூர் (திருநந்திக் கரை) வெள்ளங்குமரன். இவன் இராஜாதித்த சோழ னின் சாமந்தன் (சிற்றரசன்); நண்பன்; மகாசாமு நாயன் (பெரும்படைத் தளபதி) எனத் திருவொற்றி யூர்க் கல்வெட்டு தெரிவிக்கிறது.[17] வெள்ளங்குமரன், ஆய்வேளிர் குலத்தை - அதாவது வெள்ளை நாடர் குலத்தைச் சேர்ந்த சத்திரிய சாமந்தன் என்பதில் ஐயமில்லை. இவன், வாழ்க்கையின் பிற்பகுதியில் சதுரானன பண்டிதன் என்ற பெயரில் திருவொற்றி யூரில் தங்கிக் காளாமுக சைவ மடாதிபதியாக மாறிவிடுகிறான். கொடும்பாளூர் இருக்குவேளிர், காளாமுக சைவத்தைப் பின்பற்றியவர்கள் என்ற செய்தியையும் சித்தாந்த சைவ மடாலயங்கள் போலன்றிக் காளாமுக சைவமடங்கள் உயர் வர்ணத்த வரின் தலைமையில்தான் இயங்கின என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது தேவை.

கி.பி. 957 முதல் 970 வரை ஆட்சி புரிந்த சுந்தர சோழன், தன்னுடைய முன்னவர்களின் கொள்கை யைப் பின்பற்றினான் என்பதில் ஐயமில்லை. மலையமான் குலத்தவருடன் மணஉறவு கொண்ட தன் மூலம் பல்லவகுலத்தவர் மீண்டும் எழுச்சி யடையவிடாமல் தடையை உருவாக்கினான். மேலும், வேளிர் மரபினனான[18] பார்த்திவேந்திராதி வர்மனைத் தொண்டைமண்டல அதிபனாக்கினான். சுந்தரசோழனின் மகன் இராஜராஜசோழன் காலத்தில் வலங்கைப் பழம்படைகள்[19] என்றும் உடையார் படைக் கொங்கவாளர் எழுநூற்றுவர் என்றும் அழைக்கப்பட்ட அரசகுலப் படைவீரர்களே முதன்மையான நிர்வாகிகளாக இருந்தனர். இப் படையமைப்பின் கீழடுக்குகளில் வலங்கை வேளக்காரப் படைப்பிரிவும் இருந்ததென்றும், அவ்வேளக்காரப் படைப்பிரிவில் வேளாளர் குலத்த வரும் இடம்பெற்றிருந்தனர் என்றும் செஞ்சிப் பகுதி யிலுள்ள மேல்சேவூர்க் கல்வெட்டால் தெரிய வருகிறது.[20] வலங்கைப் பெரும்படையின் முதன்மை யான பொறுப்புகளில் இருந்தவர்கள் வலங்கை உய்யங்கொண்டார் என அழைக்கப்பட்ட சான்றோர் குலவீரர்களே என முடிவு செய்வதற்கு ஆதாரம் உள்ளது.

இராஜராஜ சோழனின் ஆட்சியில் நில வருவாய் நிர்வாக அமைப்பு செம்மைப்படுத்தப்பட்டது. பல நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றுக்கு மேல் வளநாடு என்ற அலகு புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டது. இது அதிகாரத்தை மையப்படுத்தும் முயற்சி என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[21] இந்நடை முறை முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது, கொடும்பாளூர் வேளிர் பகுதியாகிய கோனாட்டில் தான். கோனாடு, கேரளாந்தக வளநாடு எனப் பெயர்மாற்றம் பெற்றது. நீர்ப்பாசன மேலாண்மை, நிலவருவாய் நிர்வாகம் ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த[22] வேளிர் குலத்தவரின் ஆட்சிப்பகுதி இவ் வாறு அதிகாரமையமாக உருமாற்றம் பெற்றது இயல் பான ஒன்றாகும். கொடும்பாளூர் ஏரிக்கரை யிலிருந்த சுராதிராசன் பற்றிய பழங்கதையை இவ்விடத்தில் தொடர்புபடுத்திப் பார்ப்பது தகும்.

இராஜராஜனின் மகன் இராஜேந்திரனின் ஆட்சிக் காலத்தில் பல்லவ அரசகுலப் படைவீரர்களும் சோழர்

களின் கடற்படைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர் எனத் தோன்றுகிறது. இராஜேந்திர சோழனின் கடற்படை வெற்றிகளுக்கு இத்தகைய இடங்கை மீகாமன்களே முதன்மையான காரணமாக இருந்திருக்க வேண்டும். தில்லையை அடுத்துள்ள கடற்கரைப் பகுதியில் "சோழகோன்" என்ற பட்டம் பெற்ற பள்ளிகுலக் கடற்படைத் தலைவர்கள் நிலைகொண்டது இக்கால கட்டத்தில் எனலாம். இது, அடுத்து நிகழவுள்ள பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டது.

கி.பி. 1070ஆம் ஆண்டில் மரபுக்கு முரணாகச் சோழர் அரியணையைக் கைப்பற்றிய வேங்கிச் சாளுக்கியனான முதற்குலோத்துங்கன், வலங்கை மகாசேனையின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையிலும் வேளாளர் குலத்தவரின் அதிகாரத்தை மேம்படுத்தும் வகையிலும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டான். கி.பி. 1072-73ஆம் ஆண்டில் "பெரிய விஷயத்தார்" - அதாவது பெரிய நாட்டார் என்று அழைத்துக் கொண்ட வேளாளர் குலக் கூட்டமைப்பு, குலோத்துங்க சோழனின் ஒப்புதலுடன் (அல்லது முன்முயற்சியின் அடிப்படையில்) சில முடிவுகளை எடுத்துக் கல்வெட்டாகப் பொறித்து வைத்தது. கர்நாடக மாநிலம் ஆவணியில் கண்டறியப் பட்ட அக்கல்வெட்டு, பின்வருமாறு தெரிவிக்கிறது: "(பெங்களூரு -தருமபுரிப் பகுதியான) நிகரிலிச் சோழமண்டலத்திற்கு உட்பட்ட 78 நாடுகளிலும் (தொண்டைமண்டலமான) ஜெயங்கொண்ட சோழ மண்டலத்திற்குட்பட்ட 48000 பூமியிலும், வலங்கை மகாசேனைக்கு வழங்கப்பட்டிருந்த பதினெண் பூமியிலும் சோழ அரசு உருவான காலம் முதல் பசுக் களுக்கும் எருமைகளுக்கும் வரி விதிக்கப்பட்ட தில்லை. ஆனால் அண்மைக்காலத்தில் அதிகாரிகள் சோழ மூவேந்தவேளார், அவற்றுக்கு வரி விதித் துள்ளார். அவ்வரியினைச் செலுத்துவதில்லை யெனப் பெரிய விஷயம் முடிவு செய்துள்ளது". புன்புல விளைச்சலிலும் நன்செய் விளைச்சலிலும் அரசுக்குச் செலுத்தவேண்டிய கடமை (வரி)யின் விகிதத்தையும் பெரிய விஷயமே முடிவு செய் துள்ளது. நில அளவை - பதிவுக்குப் பயன்படுத்தப் படும் அளவுகோலினையும் பெரிய விஷயமே முடிவு செய்துவரையறுத்துள்ளது."[23]

இக்கல்வெட்டில் வலங்கை மகாசேனை குறிப் பிடப்பட்டிருப்பதால் அச்சேனைக்கும் இவ்வரிச் சலுகை பயனளிப்பதே என ஆய்வாளர்கள் கருது கின்றனர்.[24] அது தவறான புரிதலாகும். வலங்கை மகாசேனை எனப்பட்ட முழுநேர ராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்த பெரும்பற்று[25] எனப்பட்ட மானிய நிலங்களின் மேல்வாரக்குடிகள் அம்மகா சேனையாரே என்பதையும் கீழ்வாரக்குடிகளாக அந்நிலங்களில் பயிர் செய்து வந்த வேளாளர்களே கடமை ஏற்க வேண்டியவர்கள் என்பதையும் புரிந்து கொண்டால் இவ்வரியினை அதிகாரிகள் சோழ மூவேந்த வேளார், வேளார்களிடமிருந்தே வசூல் செய்து வந்திருக்க வேண்டுமென்றும், "பெரிய விஷயம்" எடுத்த முடிவுகள் வேளாளர்களுக்கு மட்டுமே சாதகமானவை யென்றும் புலப்படும்.

முதற்குலோத்துங்கன், தான் "கைப்பற்றிய" சோழ நாட்டை ஆள்வதற்கு இத்தகைய "பெரியநாட்டார்" களை ஆதரிப்பதே சரியான உத்தி என முடிவு எடுத்திருக்கவேண்டுமெனத் தெரிகிறது. சித்திர மேழிப் பெரிய நாட்டாரின் அணி சேர்க்கை, தொண்டைமண்டலத்திலும் திருமுனைப்பாடி நாட்டிலும் முதல் இராஜேந்திரனின் ஆட்சிக் காலத் திலேயே உருவாகிவிட்டது. கி.பி. 1062 அள விலேயே குலோத்துங்கன் ஆட்சிக்கு வருவதற்கு 8 ஆண்டுகள் முன்னரே அரச பண்டாரத்திற்கு (கரு வூலத்திற்கு)ச் செலுத்தப்படவேண்டிய நாட்டாண்மை வரியை இந்த அணியைச் சேர்ந்த நாட்டார்கள் நிர்ணயித்தனர் எனத் தாமரைப்பாக்கம் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[26] இத்தகைய ஒரு போக்கினைக் குலோத்துங்கன் திறம்படப் பயன்படுத்திக்கொண்டு தன் ஆட்சியதிகாரத்தை வலுப்படுத்திக் கொண் டான்.[27] "பெரிய விஷயம்" நிர்ணயித்த அளவுகோல் களையே குலோத்துங்கன் ஏற்றுக்கொண்டான் என்ற செய்தியை, முதல் இராஜராஜன் காலத்தையடுத்து முழுமையான நில அளவைப் பதிவு மேற்கொள்ளப் பட்டது முதற்குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் தான் (கி.பி. 1085-86) என்ற வரலாற்று உண்மை யுடன்[28] பொருத்திப் பார்த்தால், முதற் குலோத்துங் கன் காலத்தில் நிகழ்ந்த வேளாளர் எழுச்சியின் முழுப் பரிமாணமும் புலப்படும்.

முதற் குலோத்துங்கன், அதே ஆண்டில் மேற் கொண்ட, "சுங்கம் தவிர்த்த" செயல்பாட்டின்[29] நோக்கமும் சோழ அரசகுலப் படைத்தலைவர்கள் - போர்வீரர்களின் அதிகாரத்தைக் குறைத்து, வணிகர் - வேளாளர் கூட்டணியின் வலிமையைப் பெருக்கி அக்கூட்டணியைத் தனது ஆட்சிக்கு அரணாக உருவாக்குவதே.[30] வலங்கைப் பெரும்படையின் அதி காரத்தைக் குறைத்ததோடு, ஈழவர் குலத்தில் தோன்றி, ஈழச்சான்றோர்களாக உருவாகி வலங்கைப் பெரும்படைத் தலைவர்களாக நீடித்துவந்த தளபதி களைத் தவிர்த்துவிட்டு, ஈழவர் குலத்தவனாகவே இருந்துவந்த கருணாகரத் தொண்டைமானைத் தனது முதன்மைத் தளபதியாகக் குலோத்துங்கன் நியமித்தான். போர்க்கலைப் பயிற்சி வழங்குவதில் தேர்ச்சி பெற்றிருந்த போதிலும் குடும்ப அமைப்பு போன்றவற்றில் அரசகுலப் பெருங்குடிகளின் நடைமுறை மரபுகளைப் பின்பற்றாமல் சிறுகுடியா ராகவே நீடித்து வந்த ஈழவர் சமூகத்தவர், "சிறுகுடி வேளாளர்" என அழைக்கப்படும் தகுதியை அடை யவும் வேளாளர் குலக் கூட்டமைப்பில் இடம் பெறவும் முதற் குலோத்துங்கனின் நடவடிக்கை உதவியாக இருந்தது.[31]

அரசியல் மட்டத்தில், மேலைச்சாளுக்கிய அரசன் ஆறாம் விக்கிரமாதித்தனின் செல்வாக்கு வியாபகத் தைத் தடுப்பதற்காக, ஹொய்சள வம்சச் சிற்றரசர் களுடன் முதற் குலோத்தங்கன் மணஉறவு கொண் டான். சோழ அரச குடும்பத்துடனான ஹொய்சளர் களின் மணஉறவு சற்றொப்ப இரண்டு நூற்றாண்டு களுக்கு நீடித்தது. இதன் விளைவாகத் தமிழ்ச்சமூக அமைப்பில் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டன. ஹொய்சளர்கள் தொடக்கத்தில் (கி.பி.1090இல்) "துறைச்சமுத்திரத்து மலையர் குலப் புவியரசர்" (தொரசமுத்ர மலஹர க்ஷோணீச) எனக் குறிப்பிட்டுக் கொண்டனர்.[32] ஆயினும் மிக விரைவில் இவர்களும் தமிழக மலையமான் குலத்தவரைப் போன்றே யது குலத்தவர் எனக் கூறிக்கொள்ளத் தொடங்கினர்.[33] ஹொய்சளர்கள் தழைக்காட்டு கங்கர்களைத் தங்கள் படைத்தலைவர்களாக நியமித்ததோடு, "வீரகங்கர்" என்றும் பட்டம் சூடினர்.[34] காளாமுக சைவத்தை ஜீரணித்து வளர்ந்த வீர சைவ நெறியும், இராமானு ஜரின் விசிஷ்டாத்வைத வைணவ நெறியும் ஹொய் சள அரசின்மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. அதன் விளைவாக ஹொய்சளர் ஆட்சியே வேளாளர் களின் ஆட்சிதான் என்பது போன்ற ஒரு தோற்றம் உருவாயிற்று.[35]

விக்கிரமசோழனின் ஆட்சியில் (கி.பி. 1018-1136) பல்லவ குலக்கிளையினரான சம்புவரையர்கள் வேளக்காரப் படைத்தலைவராயினர்.[36] சுருதிமான் குலத்தவர், தங்கள் சாதி குறித்த வரலாற்றை விக்கிரம சோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1128 ஆம் ஆண் டில்) தான் கண்டறிந்ததாகவும், இடங்கைச் சாதி களின் ஒற்றுமைக்கு அது வழிவகுத்ததாகவும் கி.பி.13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில் குறிப் பிடுகின்றனர்.[37] கள்ள வேளக்காரர் முதலான பல வேளக்காரப் படைவீரர்கள் உருவாகிச் சோழ அரசின் முதன்மையான போர்ப்படையினராக நிலை பெறவும், இவர்களுள் பலர், தங்களுடைய வட்டாரத்தில் "பாடிகாவல்" உரிமை பெறுவதற்கும் குடிபடை(குடியானவர் - போர்வீரர்)ச் சாதியினராக இவர்கள் நிலைபெறவும் இப்போக்குகள் வழிவகுத் தன. அதிகார வர்க்கத்தின் முதன்மையான அடுக்கு களில் அமர்ந்து பயிற்சியும் அனுபவமும் பெற்ற வேளாளர் குலத்தவரின் ஆலோசனையையும் ஆதரவையும் இவர்களால் பெற இயன்றது.

சோழ அரச குலப் படையினர், கணக்கர் - காவிதி சாதியினர் ஆகியோரின் அதிகாரம் குறைந்து வேளா ளர் குலத்தவர் (ஏயர்கோன் வம்சத்தவர் போன் றோர்) முதன்மையான படைத்தலைவர்களாகவும் நிர்வாகிகளாகவும் அமர்ந்தது, சோழர் ஆட்சியின் முகத்தை மட்டுமின்றிச் சோழ அரசகுலத்தின் அடையாளத்தையும் மாற்றத் தொடங்கியது. கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காடவர் குலக் கோப்பெருஞ்சிங்கன் சோழர்களின் முடிசூடும் தலமாகும்

தலமும், சோழ அரச குலப் படையினரின் "பெரும் பற்றும்" ஆகிய திவ்லை நகரை - பெரும்பற்றப் புலியூரைக் கைப்பற்றவும், மூன்றாம் இராஜராஜ சோழனைச் சிறை செய்யவும் இயன்றது இந்நிகழ்வுப் போக்கின் விளைவே. இதன் பின்னர் சோழர்களுக்கு ஹொய்சளர்களுடனான உறவு மேலும் வலிமை யடைந்தது. அதன் விளைவாக நிலவுடைமை உறவு களில் மேலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பெருங் குடிகள் பெயரிலுள்ள நிலங்களுக்குரிய கடமை (அரசிறை) செலுத்தப்படாமல் நிலுவை விழுந்தால், அந்நிலங்களில் பயிர் செய்யும் வேளாளர்களைத் தண்டிக்கும் வழக்கம் அதுவரை நடப்பிலிருந்தது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி (மன்னனார்க் குடி)க் கல்வெட்டு அவ்வழக்கம் தடைசெய்யப்படுவ தாக அறிவிக்கிறது.[38] "பெருங்குடியாட்டம்" என்பது கிராமணியம் - அதாவது கிராமணி பதவிக்குரிய பொறுப்பு; நாட்டாண்மை எனப் பொருள்படும் என வைணவ உரை நூல்களால் தெரியவருகிறது.[39] கி.பி.13ஆம் நூற்றாண்டில் பெருங்குடிகளான அரசகுலத்தவர் ஆதிக்கம் நிலைகுலைந்தது என்பது இதனால் தெரியவருகிறது.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் சோழநாட்டிலிருந்த வேளாளர் பலர், பல்லவராயர், சேதிராயர் என்பன போன்ற அரசப் பட்டங்களைத் தரித்திருந்தனர். அப் பட்டங்களைச் சோழ அரசன் அவர்களுக்கு வழங் கினானா, அவர்களே சூட்டிக்கொண்டார்களா என நமக்குத் தெரியவில்லை. திருவெண்ணெய்நல்லூர்ச் சடையன் எனப்பட்ட சடையப்ப வள்ளல், கம்பரை ஆதரித்தவர்.[40] தொண்டைமண்டல வேளாளர் எனக் கருதப்படும் சடையப்ப வள்ளல், சேதிராயர் என்ற பட்டம் உடையவர்.[41] இப்பட்டம், இவர் சேதி மண்டலத்துத் திருவெண்ணெய்நல்லூரைப் பூர்விக மாகக் கொண்டவர் என்பதனாலோ, சேதிபர் - மலையர் - குலத்துடன் மண உறவு கொண்டவர் என்பதானாலோ இவரால் சூடப்பட்டது ஆகலாம். சோழஅரச குலத்தவரை விடச் சடையப்ப வள்ளல் போன்ற வேளாளர் குலத்தவர், அதிகாரமும் புகழும் படைத்தவர்களாயினர். அரச குலத்தவரின் பண்பான அபயதானம் - அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் - சடையப்ப வள்ளல் மேல் ஏற்றிச் சொல்லப்படுவதிலிருந்தே இதனை நாம் உணரலாம்.

சோழநாட்டின் மையப்பகுதியிலும் தொண்டை நாட்டிலும் நிகழ்ந்த இத்தகைய நிகழ்வுப்போக்கு, கொங்கு நாட்டிலும் தொடர்ந்தது. கி.பி. 911-இல் கங்க அரசன் இரண்டாம் பிருதிவிபதி, தீக்காலி வல்லத்தைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வந்த வாணர்களை வென்று சோழர்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியதற்குப் பரிசாகப் பராந்தக சோழனால் "செம்பியன் மாவலி வாணராயன்" என்று பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டான்.[42]

அப்போதிருந்தே கங்கர் குலக் காமிண்டர்கள் வாணராயக் காமிண்டன் என்ற பட்டத்தைப் புனைந் திருக்க வாய்ப்புண்டு. எனினும், வடஆர்க்காடு - வேலூர்ப் பகுதியிலிருந்த வாணர் குலத்தவர்க்கும் கங்கர் குலத்தவர்க்குமிடையில் மிகவும் நெருங்கிய மண உறவு ஏற்பட்டு அதன் விளைவாகத் தொண்டை மண்டலப் பகுதியிலிருந்த வாணர் குலத்தவர் துளுவ வேளாளர் என அழைத்துக் கொள்ளத் தொடங்கினர் எனத் தோன்றுகிறது. தழைக்காட்டுப்பகுதிக் கங்கர் களோ கன்னட மொழி அடையாளத்தை விட்டு விடாமலிருந்ததாலும் வீர சைவ சமய அடை யாளத்தை ஏற்றதாலும் கௌடர் என்ற சாதிப்பட்டத் துடன் நிலவுடைமைச் சாதியினராகத் தொடர்ந்தனர் என ஊகிக்க முடிகிறது. இவ்விரு குலத்தவரும் சோழ அரச குலத்துக்கு முற்றிலும் ஆதரவாக இருந்தனர் எனச் சொல்வதற்கில்லை.

கொங்குச்சோழர்களைப் பொறுத்தவரை, முதற் குலோத்தங்கன் அறிமுகப்படுத்திய நடைமுறை களைப் பின்பற்றிக் கி.பி. 1168 அளவில் வேளாளர் பலருக்குக் காமிண்டன் பட்டமும் படைத் தலைமைப் பதவியும் வழங்கிய நேர்ந்தது. "குறுப்பு நாட்டு விசய மங்கலம் வெள்ளாளன் படைத்தலைகளில் மாதேவன் ஆளுடையான்" என்ற குறிப்பு கொங்குச் சோழர் கல்வெட்டொன்றில் உள்ளது.[43] கி.பி. 13ஆம் நூற்றாண்டில், ஆறகழூர் வாணர் மலையமான் கூட்டணி கொங்குப்பாண்டியர் ஆட்சிக்கு அச்சுறுத் தலாக இருந்ததால், விசயமங்கலம் வேளாளர் படைத்தலைவர்களைக் கொண்டு அக்கூட்டணியை முறியடித்து, வேளாளர் குலப் படைத்தலைவர் களுக்குப் பாண்டிய குமாரர் என்றும் வாணவராயர் என்றும் பட்டமளிக்க நேர்ந்தது. இவ் வாணராயக் காமிண்டர் வம்ச முன்னோர் ஒருவரைக் குறிக்கும் கல்வெட்டு விசயமங்கலம் சித்திரமேழி விண்ணகர் எனப்பட்ட பெருமாள் கோயிலில் உள்ளது.[44] ஆற கழூர் வாணர்கள் இதன் பின்னரும் வரலாற்றில் நடைபயின்றே வந்தனர். விஜயநகர மன்னர்கள் காலத்தில் அவர்களின் ஆட்சி முற்றிலும் அழிக்கப் பட்டுப் பொழில்வாய்ச்சி (பொள்ளாச்சி) சமத்தூர்ப் பாளையக்காரராக வேளாளர் குல வாணராயக் கவுண்டர் நியமிக்கப்பட்டார்.[45] வாணர் குலத்தவர், வாணாதிராயர் என்ற பட்டத்தைக் கைவிட்டு, "வெட்டு மாவலி அகம்படியர்" ஆயினர்.[46]

கொங்கு நாட்டின் நாட்டாராக, வட்டாரத் தலைவர்களாகவும் படைவீரர்களாகவும் கொங்கு வேளாளர்கள் உருவாகி, கங்கர் குலக் காமிண்டர் களுடனான உறவுகளை அறவே உதறிவிட்டுத் தமிழ் மொழிசார்ந்த தலைமைச் சாதியினராக வடிவெடுத்து விட்டதன் விளைவாகச் சிறுகுடி வேளாளர் (ஈழவர்) முதலானோர் அவர்களுடன் கலந்து விடாமல் தனிச்சாதியினராக உள்ளனர். கொங்கு நாட்டுச் சிறுகுடி வேளாளர்கள் பஞ்சநாட்டார், செஞ்ச நாட்டார், ஆரணத்தார், மருமூட்டில்லம், சோழியர் என்ற ஐந்து பிரிவினராக உள்ளனர்; கொங்கு நாட்டாராக உருவெடுக்கவில்லை. இப்பிரிவுகளுள் சில, அண்டை மாநிலமான கேரளப்பகுதிகளில்வாழும் உள்ளன. வட்டாரம் சார்ந்த, மொழிசார்ந்த தனித்தன்மையுடைய வரலாற்றுப் போக்குகளால் நிலவுடைமை உறவுகளில் நேர்ந்த மாற்றங்கள் இவர்களுடைய சாதி அடையாளத்திலும் மாற்றங் களை நிகழ்த்தியுள்ளன. கோவையையடுத்த பேரூர்ச் சிறுகுடி வேளாளர் மடத்துச் செப்பேடு, (கி.பி. 17ஆம் நூற்றாண்டு) இக்குலத்தவரின் ஈழவர் குல அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு, ஈழகுலச் சான்றார் ஏனாதி நாதரைத் தங்கள் குலத்தவராக உரிமை பாராட்டுகிறது. ஆனால் சான்றோர் குலப் பெருமைகளையோ அரச குல மூலத்தையோ சுட்டாமல், கலிங்கம் வென்று பரணி கொண்ட கருணாகரத் தொண்டைமானின் சாதிக் கிளைக்கு அதிபன் தங்கள் குல முன்னோன் என்றே பெருமிதம் கொள்கிறது.[47] இதேபோன்று மதுரையையடுத்த திருப்பரங்குன்றம் ஈழவர் மடத்துச் செப்பேடு (கி.பி. 17ஆம் நூற்றாண்டு) சிறுகுடி வேளாளர்களின் ஈழவர் குல அடையாளங்களைத் தெளிவாகப் பதிவு செய்கிறது.[48] ஆனால் சோழநாட்டு மையப் பகுதியான தஞ்சை குறிச்சித்தெரு சுப்பிரமணிய சுவாமி கோயிலிலுள்ள, கி.பி. 1746ஆம் ஆண்டுக் குரிய சோழியவேளாளர் செப்பேடு[49], முளைவாரி அன்னமிட்டவர், சூலிமுதுகில் சோறிட்டவர் போன்ற வேளாளர்களுக்குரிய பொதுப் பிரக்ஞை சார்ந்த பெருமித நிகழ்வுகளையே தங்கள் குலத்துக்குரியவை யாகப் பதிவு செய்கிறது. "பழனியாண்டவன் துணை" என்ற தொடக்க வாசகமும் "தேங்காய்க் கடைக்காரர்கள் அனைவரும் இந்த சாசனம் நிறை வேற்ற வேண்டியது" என்ற இறுதி வாசகமுமே, முற் காலத்தில் தெங்கும் பனையும் ஏறிய, தற்காலத்திலும் கேரள மாநிலத்தில் தென்னை மரத்திலிருந்து கள்ளிறக்குகிற தொழில் செய்து வருகிற, ஈழவர் களுடன் இவர்களுக்கிருந்த பூர்வீக உறவின் அடை யாளமாக - சிறு சாயலாக - ஒட்டி நிற்கின்றன. அதே வேளையில், தஞ்சையை ஒட்டியுள்ள அறந்தாங்கிப் பகுதியில் ஆட்சி செய்த மிழலைக் கூற்றத்து வேளா ளர்கள், கருணாகரத் தொண்டைமானைத் தங்கள் குல முன்னோராகக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர்.[50] கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து சோழநாட்டின் மையப்பகுதியில் வேளாளர் குலத்தவரின் அணி சேர்க்கையும், உறவும் வலிமையாக நீடித்து வந்ததன் காரணமாகவே, தஞ்சைப் பகுதிச் சோழிய வேளா ளர்கள் வேளாளர் குலம் என்கிற விருட்சத்தின் சிறு கிளைகளே தாங்கள் என்பதைப் போன்ற பாவனை களை மேற்கொள்ள நேர்ந்துள்ளது; தமிழகத்தின் எல்லைப் பகுதிகளிலுள்ள சிறுகுடிவேளாளர்கள், ஈழவர் குல மூலத்தை மறவாமல் பதிவு செய்யும்

அதே சமயத்தில் தமிழ் மொழி சார்ந்த யதார்த்த வாழ்வியலின்படி வேளாளர் குலப்பிரிவினராக நீடிக்க நேர்ந்துள்ளது. "தொண்டைமான்" என்பது கொங்கு மண்டலத்தில் வேளாளர் குலப்பிரிவின் பட்டப்பெயராயிற்று.

தமிழக வேளாளர் எழுச்சி என்பது கி.பி14- 15ஆம் நூற்றாண்டளவில் முழுமை பெற்றுவிட்டது. ஒரு காலத்தில் பல்லவ அரச குலத்தவர் என உரிமை கொண்டாடிய பள்ளி குலத்தார், பல்லவராயக் கவுண்டர் எனப் பட்டம் பெற்ற கொங்கு வேளாளர் களுக்குக் கட்டுப்பட்ட, "பள்ளி வேளாளர்" என்ற அந்தஸ்தினை ஏற்று அமைதியடையும் சூழல் உருவாயிற்று.[51]

கொங்கு வேளாளர்களிடையே நிலவும் கூட்டம் என்ற அமைப்பு கொங்கு மண்டலப் பூர்வகுடி யினரான வேட்டுவர்களிடமிருந்து பெற்றுத் தன்மய மாக்கிக் கொண்ட அமைப்பாகவே தோன்றுகிறது. ஆயர் சமூகத்தவராக இருந்து அரச குலத்தவரின் வேளப்பிள்ளைகளாக ஆனவர்களும், வேட்டுவர் குலத்தவராக இருந்து அவ்வாறு ஆனவர்களும், அரச குலத்தவரின் திருமண நிகழ்வுகளின்போது சீதன வேளாட்டியர்களாக வந்து சேர்ந்தோரின் வம்சத்த வர்களும் இணைந்து கொங்குமண்டல வேளாளர் களாக உருவாகியிருக்க வேண்டும். இவர்களுள் வண்ணக்கன் கூட்டத்தார் போன்றோர் மிகுந்த பழமையான வேளாண்குடியினராக இருக்கலாம். போர்க்குடித் தலைமைப் பதவியைக் குறிக்கும் "காமிண்டன்" என்ற பட்டம் முசிறிப் பகுதியில் சான்றோர் சமூகத்தவர்க்கும் கொங்கு மண்டலத்தின் பிறபகுதிகளில் வேட்டுவர், பள்ளிகுலத்தார், வேளாளர் ஆகியோர்க்கும் உரிய சாதிப் பட்டமாக வழங்கி வந்துள்ளது. ஆயினும், கொங்குமண்டலத் தலைமைக் குடியினராக உருவாகிவிட்ட கொங்கு வேளாளர்களே காமிண்டன் (கவுண்டன்) என்ற சாதிப் பட்டத்தால் அறியப்படும் முதன்மைக் குடிகளாக உள்ளனர்.

கி.பி. 15-16ஆம் நூற்றாண்டுகளில் விஜயநகர அரசும் அதனைத் தொடர்ந்து நாயக்கத் தனங்களின் ஆட்சியும் நிலவியபோது தென்காசிப் பாண்டிய மன்னர்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் அறந்தாங்கித் தொண்டை மான்களும் சிவந்தெழுந்த பல்லவராயன் மரபினருமே தமிழகச் சாமந்தர்களாக - பூர்விகத் தமிழ் மரபு சார்ந்த சிற்றரசர்களாகத் தென்படுகின்றனர். இவ்விரு வம்சத்தவருமே வேளாளர் குலத்தவராவர். கார் காத்த வேளாளர் மர பினரான சிவந்தெழுந்த பல்லவராயன் வம்சத்தவர், தொன்மையான அறந்தாங்கித் தொண்டைமான் வம்சத்தவரை விரட்டி விட்டு மல்லையில் (புதுக் கோட்டை - மிதிலைப்பட்டிப் பகுதி) ஆட்சி செய்த வர்கள் எனத் தங்களைக் குறிப்பிட்டுக் கொண் டனர்.[52] அக்குறிப்பிட்ட காலகட்டத்தில் தமிழ்ச்சமூக அமைப்பில் அறந்தாங்கித் தொண்டைமான் வம்சத்தவரே உயர்குடியினராகக் கருதப்பட்டிருக்க வேண்டும். இதனை முன்னரே விவாதித்துள்ளோம். "துளங்குநீள் முடியரசர் தம் குருசில்" என்றும் "நெல் முடிவேந்தன்" என்றும் இவ்வேளாண் சாமந்தங்கள் குறிப்பிட்டுக் கொண்டனர்.[53] சிவந்தெழுந்த பல்லவ ராயன் வம்சத்தவரோ, பூர்விகப் பல்லவ அரசர் களும் வேளாண் சாமந்தர் மரபினராகி விட்டவர்கள் தாம் என்பதை உணர்த்தும் வகையில், தங்களை மகேந்திர பல்லவன் வம்சத்தவராகக் குறிப்பிட்டக் கொண்டனர்.[54] இவ்வாறு முற்காலப் பல்லவர் குலத்துக்கு உரிமை கொண்டாடினாலும் தென்ன வன் என்றும் சோழன் மருமகன் என்றும் கூறிக் கொள்வதன் மூலம்[55], காக்காத்த வேளாளர்கள், பாண்டிவேளாளர்கள் (பாண்டிய குலத்தவரின் வேளத்துப் பிள்ளை) என அழைக்கப்படுவதன் காரணத்தையும், சோழராட்சியின் இறுதிக்காலத்தில் சோழர் குலப் பெண்ணை மணம் புரிந்தவர்கள் இக்குலத்தவர் என்ற வரலாற்றையும் புலப்படுத்தத் தவறவில்லை.[56]

சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, கார்காத்த வேளாளர்கள் தாம் தமிழகத்தின் ஆட்சியாளர்கள் என்ற பெருமித உணர்வை அழுத்தமாகப் பதிவு செய்கிறது. சிவந்தெழுந்த பல்லவராயனைக் கொன்று, புதுக்கோட்டைப் பகுதியைக் கள்ளர் குலத்தவர் வசம் கிழவன் சேதுபதி ஒப்படைத்தார் என்பது வரலாறு. சேதுபதி வம்சத்தைச் சேர்ந்த விஜயரகுநாத சேதுபதி மீது இயற்றப்பட்ட பண விடுதூது என்ற இலக்கியம் கி.பி. 18ஆம் நூற்றாண் டின் முற்பகுதிக்குரியது. இந்நூல் சேதுபதியை "மேழிக் கொடியுடைய வேளாளன்" என்றே குறிப்பிடுகிறது.[57] வேளாளர் எனக் குறிப்பிட்டுக் கொள்வது பெருமைக்குரிய ஒன்றாகக் கருதப்பட்டது என்பதோடு, தமிழர்களின் வீரம், விருந்தோம்பல் முதலிய விழுமியங்களின் அடையாளமாகத் திகழ் வோர் வேளாளர்களே என்ற கருத்து நிலைபெற்று விட்டது என்பதையும் இது தெளிவாக உணர்த்து கிறது. "கள்ளர் மறவர் கனத்ததோர் அகம்படியர் மெள்ள மெள்ள வெள்ளாளராயினர்" என்ற பழ மொழி உருவான பின்னணி இதுவே.

அடிக்குறிப்புகள்:

1. சேக்கிழார் புராணம் எழுதியவர், மெய்கண்டார் சந்தானத்தின் நான்காம் குரவரான உமாபதி சிவாச்சாரியார் அல்லர்; பிற்காலத்தவர் என அறிஞர் மா.இராசமாணிக் கனார் எழுதியுள்ளார் (சேக்கிழார். 1943) அது சரியான கருத்தாகவே இருப்பினும், சேக்கிழார் புராண ஆசிரியர் சித்தாந்த சைவ மரபினர் என்பதில் ஐயமில்லை.

2. வாலிகண்டபுரம் கல்வெட்டு - கி.பி. 1227 Annual Report on Epigraphy 276/1943-44.

3.திருவரஞ்சுரம் கல்வெட்டு- கி.பி. A.R.E. 184/1940-41 A.R.E. 276/1943-44.

4. "முள்ளூர் மன்னன் மாவூர்ந்து எல்லித்தழீ இய இன நிரை" - நற்றிணை 291.

5. சான்றோர் சாதியில் கள்ளச்சான்றார், பள்ளிச்சான்றார், மலையான்சான்றார் என்ற பிரிவுகள் உள்ளன. இவை அவ்வக்குலத்தவருடனான மணஉறவால் தோன்றிய பிரிவுகள் ஆகலாம்.

6. ஹொஸக்கோட்டைச் செப்பேடு, "பல்லவர் செப் பேடுகள் முப்பது" - ப.378, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 6000113 - 1999. கங்கர்கள் ஜைனர்களாக இருப்பினும், பறிக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான பிரம்மதேயங்களை மீட்டுப் பிராமணர்களுக்கு வழங்கி, மழைக்கால முடிவில் நிகழும் யாகத்திற்கிணையான ஆக்ரயணச் சடங்கைச் செய்தனர் என இச்செப்பேட்டின் வரி 12-16 குறிப்பிடுகிறது.

7. A.R.E. 252/193637 இப்பாடலின் வாசகங்கள் "சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி" என்ற நூலில் பக். 239 -41 இல் திரு.ஏ.ஏகாம்பரநாதன் அவர்களால் வெளியிடப் பட்டுள்ளன (பதிப்பு: ஜைன ஆய்வியல் கழகம், சென்னை-6000079, 1998)

8. பக். 604-608, பிற்காலச் சோழர் வரலாறு, தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.

9. A.R.E. 515/1912.

10. ஊற்றத்தூர்க் கல்வெட்டு. கி.பி. A.R.E. 489/1912 pp. 551552, Colas - K.A.N.Sastry. சுருதிமான் பிரிவினர் மூப்பனார் என்றும், மலையமான் பிரிவினர் நயினார் என்றும், நத்தமான் பிரிவினர் உடையார் என்றும் சாத்தப்பட்டம் புனைகின்றனர். இம்மூன்று பிரிவினரையும் "பார்க்கவ குலச் சத்திரியர்" எனக் குறிப்பிடுவது மரபு.

11. p.405, Colas - K.A.N. Sastry

12. பார்க்க ப.175, காலவெளியில் ஒரு ஜீவநதி - கு.அருணாசலக்கவுண்டர், பொள்ளாச்சி இலக்கியக் கழகம், பொள்ளாச்சி - 642 001, - 1998,

13. A.R.E. 447/1913; கல்வெட்டு எண் 47, சேலம் நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள் - அ.கிருட்டிணன், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613 005, 2001,

14. A.R.E. 440/1913; கல்வெட்டு எண் 38, சேலம் - நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்

15. "The Cola State" - in p.84. KAVERI, -Studies in Epigraphy Archacology and History T. Subbrayalu Felicitation Volume. Editor : S. Rajagopal, Panpattu Veliyeettakam, Chennai . 2001.

16. Inscriptions of the Pudukkottai State No. 14, Line 11.

17. Epigraphia Indica Vol. XXVII. p. 293.

18. பார்த்திவ சேகரபுரம் என்று பெயரிட்டுச் சாலையை உருவாக்கிய ஆள்வேளிர் குல மன்னன் கோக்கருநந்தடக் கனின் வம்சத்தவனாகப் பார்த்திவேந்திராதி வர்மன் இருக்க வாய்ப்புண்டு. இவனைப் பல்லவ குலத்தவனாகச் சிலர் கருதுவது ஏற்புடையதன்று.

19. S.I.I. Vol.I no.35 (தஞ்சைக் கல்வெட்டு)

20. S.I.I. Vol. XVII no. 238.

21. p. 30, Trade and Statecraft in the age of Colas - Kenneth R.Hall, Abhinav Publication, New Delhi, 1980.

22. பார்க்க: "வெட்டிப் பேறும் அச்சுப்பேறும்" - பக். 203 - 215 வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்.

23. Epigrpahia Carnatica vol. X. Mb. 49(a) p.53839, Colas, K.A.N. Sastry.

24. p.87 "KAVERI" (The Cola State).

25. பெரும்படைகளுக்குரிய நிலங்கள் "பெரும்பற்று" என்றும், அச்சொல்லின் வடமொழியாக்கமான "பரிக்ரகம்" என்ற பெயராலும் வழங்கப்பட்டன. போர்ப் பயிற்சி நிலையங்களையும் அவற்றின் நுகர்வுக்காக வழங்கப்பட்ட விளைநிலங்களையும் சேர்த்தே பெரும்பற்று என்றும், பரிக்ரகம் என்றும் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

26. A.R.E 179, 188/1973-74, மேற்கோள்: p126, KAVERI (The Cola State)

27. மேலும் ஆதாரங்களுக்குப் பார்க்க: ப.63, வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்.

28, ப. 312, பிற்காலச் சோழர் வரலாறு - தி.வை.ச. பண்டாரத்தார்.

29. p107, The Cholas - N. Sethuraman, Raman and Raman, Kumbakonam, 1977.

30. முதற் குலேத்துங்கன் சுங்கம் தவிர்த்தது ஏன்? - "கல்வெட்டு" - காலாண்டிதழ், இதழ் எண் 75. அக்டோபர் 2008. தொல்லியல்தறை. சென்னை - 600008.

31. பார்க்க: பக் 42-45, வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்.

32. Epigraphia Indica, Vol. XXII no.11 f.n.5 (Jained sotne inscription of Jagaddeva" by Dhinendra Chandra Ganguli)

33. கி.பி. 117-க்குரிய பேளூர்ச் செப்பேட்டில் இக் குறிப்பு உள்ளது. (p. 36, colas - K.A.N. Sastry); 12ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட மூவருலா, "பொற்றுவரை இந்து மரபு" (துவாரகைச் சந்திரகுலக் கிளை) என ஹொய்சளர் குலத்தைக் குறிப்பிடுகிறது.

34. p.327, Colas - K.A.N. Sastry.

35. பார்க்க: ப.64, வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்.

36. A.R.E. 389/1922. கல்வெட்டுகளில் வேளைக்காரர் என்ற தொடரே பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் இப்படைப் பிரிவு வேளம் என்ற அமைப்பை ஒத்ததே.

37. A.R.E. 489/1912.

38. "பெருங்குடிகள் பேரால் கடமைக்கு வெள்ளாளரைச் சிறைப்பிடித்தல் இவர்கள் அகங்களில் புக்கு ஒடுக்குதல் செய்யக் கடவதல்ல" - S.I.I. Vol VI no48.

39. ஈடு 3:5:6.

40. "நல்நீர்ப் பண்ணை வெண்ணெய்ச் சடையன் புகழ் போல்" நிலவொளி வீசியதாக வருணிக்கிறார் கம்பர் (கம்ப ராமாயணம், பால காண்டம், மிதிலைக் காட்சிப் படலம், பா.73)

41. A.R.E. 29, 34, 43/1925 II ; 57, 58/1931.

42. ப.41, பிற்காலச் சோழர் வரலாறு, தி.வை.ச. பண்டாரத்தார்.

43. கல்வெட்டு எண் 301, "கொங்கு வேளாளர் கல் வெட்டும் காணிப்பாடலும், "செ.இராசு, கொங்கு ஆய்வகம், ஈரோடு - 11, 2007.

44. கல்வெட்டு எண் 309, மேற்படி நூல்.

45. கண்ணகுலப் பட்டயம், ஆருகளேழு (அறகழூர்) வாணனைச் சூரிய காங்கயக் கவுண்டர் வென்று, விஜயநகர அரசர் இராமராயரால் சிறப்பிக்கப்பட்டாரெனக் குறிப் பிடுகிறது, (ப.90 கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள், செ.இராசு).

46. கணக்கன் கூட்டத்தார் பட்டயம், (பக். 238-40, மேற்படிநூல்)

47. பக், 285-89, மேற்படிநூல்.

48. பார்க்க: ப, 154, அடிக்குறிப்பு 11, மறையும் மறைய வர்கள் முதலிய ஆய்வுக் கட்டுரைகள், எஸ்.இராமச்சந்திரன், எனி இந்தியன் பதிப்பகம், சென்னை - 17. 2007.

49. செப்பேடு எண் 17, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் ஐம்பது, செ.இராசு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1983.

50. கி.பி. 1741-க்குரிய அழுஞ்சியேந்தல் செப்பேடு, வரி.19 (ப.134, அறந்தாங்கித் தொண்டைமான்கள், புலவர். செ.இராசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -113 -2008)

51. காலிங்கராயன் அணைப்பட்டயம், கண்ணகுலப் பட்டயம், (பக். 71, 86-89, கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், செ. இராசு)

52) "தொல்லை அறந்தாங்கித் தொண்டை மானைத் துரந்து மல்லை அரசிருந்த மன்னவனும்" - சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, கண்ணி. 15, பதிப்பாசிரியர். இரா.நாகசாமி, பக். 17, "கல்வெட்டு" காலாண்டிதழ், இதழ் 14, காளயுக்தி, ஆடி, தொல்லியல் துறை, சென்னை -8,

53) கி.பி. 1759-க்குரிய பண்ணைவயல் செப்பேடு, மெய்க்கீர்த்தி (ப.67, அறந்தாங்கித் தொண்டைமான்கள்). கி.பி1726-க்குரிய ஏம்பல் வயல் செப்பேடு. மெய்க்கீர்த்தி ப. 136, தமிழ்நாட்டுச் செப்பேடுகள், தொகுதி II ச.கிருஷ்ணமூர்த்தி, மெய்யப்பன் தமிழாய்வகம், 2002.

54. சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, கண்ணி 20.

55. மேற்படி நூல், கண்ணி 5, 163.

56. பார்க்க: ப. 70, வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்.

57. "விஜயரகுநாத பிள்ளை பேரில் பண விடுதூது" பதிப்பாசிரியர்: நிர்மலா தேவி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 013.

தமிழினி

மார்க்சிய மெய்யியல் - இராசேந்திர சோழன்	ரூ. 300
நாடோடித் தடம் - ராஜ சுந்தரராஜன்	250
ஏதுமற்ற நிலையில் - ஜே. கிருஷ்ணமூர்த்தி	90
அறிவும் நம்பிக்கையும் - ஸ்ரீரங்கம் வி மோகனரங்கன்	55
பாரதிக் கல்வி - ஸ்ரீரங்கம் வி மோகனரங்கன்	80
நாமார்க்கும் குடியல்லோம் - கரு. ஆறுமுகத்தமிழன்	90
சிலம்பின் காலம் - இராம கி	140
அறிவு நிலைகள் பத்து - இரா. குப்புசாமி	100
ரூஸோ - இரா. குப்புசாமி	35
நீட்சே - இரா. குப்புசாமி	35
ஆகோள் பூசலும்... - ராஜ் கௌதமன்	45
ஆரம்பகட்ட முதலாளியமும்... - ராஜ் கௌதமன்	45
இன்றைய காந்தி - ஜெயமோகன்	350
இந்திய ஞானம் - ஜெயமோகன்	150
எழுதும் கலை - ஜெயமோகன்	60
காவலன் காவான் எனின் - நாஞ்சில்நாடன்	90
அணுக்குண்டும் அவரை விதைகளும் - பாமயன்	80
பேய்க்கரும்பு - பாதசாரி	80
அன்பின் வழியது உயிர் நிழல் - பாதசாரி	65
ஆதிகேசவப் பெருமாள் ஆலயம் - அ.கா.பெ	190
படிக்கக் கேட்ட பழங்கதைகள் - அ.கா.பெ	80
பெண்ணியப் பார்வை - க. பரிமளம்	60
அணுசக்தி - ஜெயபாரதன்	270
கொங்கு வட்டாரச் சொல்லகராதி - இரா.ரவிக்குமார்	100
சிலப்பதிகார காப்பியக் கட்டமைப்பு - ஆ.பழநி	0
தமிழ்ப் பழமொழிகள் - தே. லூர்து	0
நடுநாட்டு சொல்லகராதி - கண்மணி குணசேகரன்	0
பாட்டும் தொகையும் தொல்காப்பியமும்-ராஜ்கௌதமன்	185
கான்சாகிப் - நாஞ்சில் நாடன்	120
சூடிய பூ சூடற்க - நாஞ்சில் நாடன்	90
நாஞ்சில் நாடன் கதைகள்	320
அ. முத்துலிங்கம் கதைகள்	500
முனிமேடு - எம்.கோபாலகிருஷ்ணன்	75
திசையெல்லாம் நெருஞ்சி - சு.வேணுகோபால்	60
வெண்ணிலை - சு. வேணுகோபால்	160
இரவு - ஜெயமோகன்	140
நெடுஞ்சாலை - கண்மணி குணசேகரன்	230
காவல்கோட்டம் - சு.வெங்கடேசன்	650
பின்தொடரும் நிழலின் குரல் - ஜெயமோகன்	420
அனல் காற்று - ஜெயமோகன்	90
கன்னி - ஜெ. பிரான்சிஸ் கிருபா	250
ஆழி சூழ் உலகு - ஜோ டி குருஸ்	380
காடு - ஜெயமோகன்	260

67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14

www.tamilini.in | tamizhninool@yahoo.co.in

9344290920, 9884196552